REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: சித்திரை 28உ வெள்ளி (10—5—57) ★ ★ வெளியூர்: சித்திரை 29உ சனி (11—5—57) இதழ் [284

வ.உ.சி., வ.வே.சு., குமரன் ஆகியோருக்கு நினைவுச் சின்னம் ஏற்படுத்த முயற்சி?

சென்னை, மே 10—

இந்தியாவின் முதல் சுதந்திரப் போராட்டத்தின் 100-வது ஆண்டுவிழாவை முன்னிட்டு, தமிழ்நாட்டுச் சுதந்திர வீரர்களான வ. உ. சிதம்பரம், வ. வே. சுவாமிநாதன், திருப்பூர் குமரன் ஆகியோருக்கு நினைவுச் சின்னங்கள் அமைக்கப்படுமாம்.

இந்த விழா சென்னை மாநிலத்தில் கொண்டாடப்படும் போது சிறையிலுள்ள கைதிகளுக்கு மன்னிப்போ, விடுதலையோ அளிப்பதுபற்றி சென்னை அர்சாங்கம் யோசித்து வருகிறதாம்.

'நெசவாளர் துயர் நீங்க மாநிலத்திற்கு எல்லா அதிகாரங்களும் தேவை'

'ஆச்சாரியார் யோசனையே எடுபடவில்லையே!'

கைத்தறி வார விழாவில் அண்ணு முழக்கம்

காஞ்சியில் நூற்பு ஆலை நிறுவக் கோரிக்கை

காஞ்சிபுரம், மே 9—

"தமிழ்நாட்டு நெசவாளர்களின் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேடவும், வாழ்க்கையை முன்னேற்றவும் வேண்டுமானுல் மாநில சர்க்காருக்கு முழு அதிகாரங்கள் இருக்க வேண்டும்.

"நெசவாளர்களின் துயர் துடைப்பதற்கென மாநில மந்திரிகள் கூறும் யோசனைகளை மத்திய சர்க்கார் செவிகொடுத்துக் கேட்பதில்லை.

"ஆச்சாரியார் முதன் மந்திரியாக இருந்த காலத்தில் கரை போட்ட வேஷ்டி, சேலையினைக் கைத்தறி நெசவுக்கென்றே பிரத்தியேகமாக ஒதுக்கித்தர வேண்டுமென திட்டம் கொண்டுவந்தார்; ஆனுல் டெல்லி சர்க்கார் இந்தத் திட்டத்தினை ஏற்றுக்கொள்ளவே இல்லை.

"ஆச்சாரியார் போன்ற பெரிய தலைவர்களின் யோசனையையே இந்த டெல்லி சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லையென்ருல், உங்களுடையவும் என்னுடையவும் யோசனையை இந்த டெல்லி சர்க்கார் ஏற்கும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?"

என்று அண்ணு அவர்கள், காஞ்சிபுரம் கைத்தறி வார விழாவில் பேசுகையில் கூறியிருக்கிருர்.

கூட்டத்தில் பல கட்சியினரும் கலந்துகொண்டிருக்கின்றனர்.

கூட்டத்திற்கு நகர மன்றத் துணைத் தலைவர் ஏ. கே. தங்கவேலு முதலியார் அவர்கள் தலைமை தாங்கியிருக்கிருர்கள்.

பல நகராசபை உறுப்பினர்கள் கையொப்பமிட்டுத் தலைவரிடம் தந்த மனு ஒன்றில், 'காஞ்சியில் கைத்தறிகளுக்குத் தேவையான நூல் சப்ளை செய்வதற்காக ஒரு நூற்பு ஆலை ஏற்படுத்த வேண்டும்' என்று யோசனை கூறப்பட்டிருக்கிறது.

இந்தியைத் தீவிரப்படுத்தக் கோரி சோஷலிஸ்டுகள் போராட்டம்!

இலட்சுமணபுரி, மே 9—

இந்தி மொழியை ஆங்கிலத்திற்குப் பதிலாக எல்லா அரசாங்க அலுவல்களுக்கும் உபயோகப்படுத்த வேண்டுமென்ற தங்களின் கோரிக்கையையும், வெள்ளையரின் சிலைகளை அகற்றி அவற்றைப் பொருட்காட்சிசாலைகளில் வைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் சர்க்கார் ஏற்றுக்கொண்டால் திட்டமிட்டுள்ள ஒத்துழையாமை இயக்கத்தை தாங்கள் கைவிட்டுவிடுவதாக உ.பி. சட்ட சபை சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் ராஜ் நாராயண் கூறியிருக்கிருர்.

"சத்தியாக்கிரகம் என்பது சந்தோஷமான சமாச்சாரம் அல்ல; ஆனுல் எங்களுக்கு வேறு வழியில்லை. இப்போதுகூட நாங்கள் ஒரு சமரசத்திற்கு வரத் தயார்தான். ஆனுல், சர்க்கார், இந்தியை ஆட்சி மொழியாக்குவதில் தீவிரம் காட்ட மறுக்கிறது—பிடிவாதமாயிருக்கிறது".

என்றும் அவர் பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிருர்.

கவர்னர் மாளிகைமுன் ஆர்ப்பாட்டம்!

நூற்றுக்கணக்கானோர் கைது

ஓடிவரும் அகதிகள் அட்டகாசம்

கல்கத்தா, மே 9—

கவர்னரின் 'ராஜ பவன'த்தருகே 323 அகதிகள் கைது செய்யப்பட்டனர் என்று தெரியவருகிறது.

பாகிஸ்தானிலிருந்து ஓடிவரும் அகதிகளை மேற்கு வங்கத்திலேயே குடியமைக்க வேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டத்திலீடுபட்டனராம் இந்த அகதிகள்!

இவர்களது இந்தக் கோரிக்கைக்காக இடதுசாரி கட்சிகள் அனைத்தும் கூடி ஒரு முன்னணி அமைத்துள்ளனவாம்.

இவர்கள்தான் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னின்று நடத்துகின்றனர் என்றும் தெரியவருகிறது.

தினமும் இதுபோல ஆர்ப்பாட்டம் நடைபெறுவதாகத் தெரியவருகிறது.

பீகாருக்கு அனுப்பிவைக்கப்பட்ட சுமார் 10,000 அகதிகள் இப்போது மேற்கு வங்கம் வந்து ஹௌரா இரயிலடியில் கூடி அட்டகாசம் செய்துவருவதாகத் தெரியவருகிறது.

ஆள்பிடிக்கும் படலம் ஆரம்பம்

காங்கிரஸ் தலைவர் வலைவீச்சு

புதுடில்லி, மே 9—

கடந்த தேர்தலில் காங்கிரஸ் வெற்றிபெற பாடுபட்ட அனைவரையும் நிரந்தரமாகக் காங்கிரஸ் கட்சியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாக மாற்றிக் கொள்ள மண்டலக் காங்கிரஸ் கட்சிகளிடம் காங்கிரஸ் தலைவர் தேபர் ஆலோசனைக் கேட்டுள்ளார் என்று தெரியவருகிறது.

மேலும் காங்கிரசில் உறுப்பினர்களைச் சேர்ப்பதற்காகக் கட்சியின் சில நிபந்தனைகளையும் தளர்த்தக்கூடும் என்று செய்தி ஒன்று வெளியாகி யிருக்கிறது.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு உபகாரச் சம்பளம்

கேரள மாநில சர்க்கார் பரிசீலனை

காங்கிரஸ் உறுப்பினர் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டது

திருவனந்தபுரம், மே 9—

தனியார் (பிரைவேட்) பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஓய்வு பெறும்போது, அவர்களுக்கு ஓய்வுகால உபகாரச் சம்பளம் (பென்ஷன்) அளிப்பதுபற்றி சர்க்கார் அனுதாபத்துடன் பரிசீலனை செய்துவருகின்றனர் என்றும், வரவு-செலவுத் திட்டத்தை விவாதிக்க சட்டசபை கூடும்போது இந்த ஆசிரியர்களுக்குப் 'பென்ஷன்' தருவது பற்றிய மசோதாவினை சர்க்கார்கொண்டு வரும் என்றும் கேரள கல்வி மந்திரி ஜோசப் முண்டசேரி கூறியிருக்கிருர்.

ஆபிரகாம் என்ற காங்கிரஸ் உறுப்பினர், இதுபோல ஆசிரியர்களுக்கு உபகாரச் சம்பளம் தர வேண்டுமெனக் கோரி ஒரு மசோதாவினைக் கொண்டு வந்தார்.

சர்க்கார் தரப்பில் மந்திரி மேற்கண்டவாறு கூறியதன்பேரில் அவர் தனதுமசோதாவினைத் திரும்பப் பெற்றுக்கொண்டார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்—அறிக்கைஎண்: 4/57

சென்னை மாவட்டக் கழக உறுப்பினர்களுக்கு:

★

தி. மு. கழகப் பொதுக்குழுவால் முடிவெடுக்கப்பட்டு, கழகத்திலிருந்து விலக்கிவைக்கப்பட்டவர்களின் காரணமாகக் காலியாகியுள்ள இரண்டு பொதுக்குழு உறுப்பினர்கள் பொறுப்புகளுக்கும், தோழர் சி. டி. டி. அரசு அவர்களின் விலகுதலின் காரணமாகக் காலியாகியுள்ள பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கும், புதிய பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்குரிய நாளாக 12—5—57-ஆம் நாள் இதன்மூலம் உறுதிசெய்யப்படுகிறது.

தேர்தல் 12—5—57 அன்று காலை 10-மணிக்கு சென்னை 'அறிவக'த்தில் நடைபெறும்.

9—5—57
'அறிவகம்'
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. க.

குறிப்பு:—தலைமைக் கழகத்தின் 1—5—57-ஆம் நாளிட்ட 3/57 அறிக்கையில் குறிப்பிட்டிருந்தபடி 12-5-57-ல் நடைபெறுவதாயிருந்த சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் பொறுப்புக்கான தேர்தல் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பொதுக் குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் மட்டுமே 12—5—57-ல் நடைபெறும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சாதி அழிப்புப் போராட்டம்

எஸ்.குருசாமியுடன் 25 பேர் கைது

சென்னை, மே 9—

இன்று நடைபெற்ற சாதி அழிப்புப் போராட்ட மறியலில் தோழர் எஸ். குருசாமியுடன் 25 தொண்டர்கள் போலீஸ் கமிஷனரின் தடையை மீறியதாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை அரசாங்கம் வற்புறுத்துமா?

இரண்டாவது கப்பல் கட்டும் துறை எங்கு ஏற்படும்?

புதுடில்லி, மே 7—

இரண்டாவது கப்பல் கட்டும் துறை எங்கு ஏற்படுத்துவது என்பதுபற்றி மத்திய அரசாங்கம் மாநிலங்களின் கருத்துக்களை வரவேற்று இருப்பதாகத் தெரிகிறது.

மைசூர் முதலமைச்சருக்கு கருப்புக்கொடி

சம்யுக்த மராட்டியம் கோரி ஆர்ப்பாட்டம்

பெல்காம், மே 9—

சம்யுக்த மராட்டிய ஆர்ப்பாட்டக்காரர்கள் சுமார் 6,000 பேர் கூடிநின்று இங்கு வந்த மைசூர் முதன் மந்திரி நிஜலிங்கப்பாவிற்குக் கருப்புக்கொடி வரவேற்புத் தந்திருக்கின்றனர்.

அவர் கைத்தறி வார விழாவினை ஒட்டி மாருதி கோவிலில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொள்ள வந்தார்.

மத்தியசுமத்திரா பிரதிநிதி ஜகார்தாவில் கைது

ஜகார்தா, மே 9—

மத்திய சுமத்திராவைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவரை ஜகார்தாவில் கைது செய்திருப்பதாக இந்தோனேஷிய இராணுவத்தினர் அறிவித்திருக்கின்றனர்.

நம் நாடு

சென்னை 10—5—57 வெள்ளி

முதல் வெற்றி

பொதுத் தேர்தலுக்குப் பிறகு முதல் முதலாகக் கூடிய சட்டசபை, கவர்னர் திறப்பு விழா சொற்பொழிவுடன் துவங்கி, அதுபற்றி விவாதித்து நன்றி தெரிவித்துக் கொள்வதுடன் முடிவடைந்து விட்டது. வழக்கமாக நடைபெறுகின்ற சடங்கு நடைபெற்று இருக்கின்றது எனக் கூறுவதைத் தவிர்த்து இக்கூட்டத்தைக் குறித்து வேறு ஒன்றும் சிறப்பாகக் கூறுவதற்கில்லை.

இதற்கு முன்பு எப்பொழுதும் காட்டப்படாத அளவில், பொதுமக்கள் இப்பொழுதைய சட்டசபை நிகழ்ச்சிகளுக்கு அக்கறை காட்டி இருக்கின்றார்கள் என்ற உண்மையை எவரும் அறிவர். பொதுமக்களிடை உருவாகியுள்ள இம்மாற்றம் வரவேற்கத்தக்கது; பேணிக் காப்பாற்றிவரத்தக்கது.

சட்டசபை நிகழ்ச்சிகளில் அக்கறை காட்ட வேண்டும் என்ற புதிய ஆர்வத்தைக் கணிசமான அளவு பொதுமக்களிடம் தோன்றச் செய்து இருப்பது எது? அதற்கு முழுதும் பொறுப்பானவர்கள் எவர்?

இவ்விரு வினாக்களுக்கும் பொருத்தமான விடை காண்பது கடினமானதல்ல. பொதுவாக நமது முன்னேற்றக் கழகத்தின் சட்டசபை நுழைவும் அதிலும் அறிஞர் அண்ணாவின் ஒப்பற்ற தலைமையின்கீழ் கழகச் செயல் வீரர்கள் சட்டசபையில் தாயக விடுதலைக்காகக் கடமையாற்ற முதல் முதலாக முனைந்திருப்பதும், இப்புத்தம் புதிய நிலைக்கு மூலகாரணமாகும் என்ற உண்மையை, நமது அரசியல் எதிரிகளாகத் தங்களைக் கருதிக்கொண்டிருப்பவர்களும் ஒப்பப் பின்வாங்க மாட்டார்கள்.

தம்பால் பொதுமக்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்கு மாறாக இதுவரை நமது முன்னேற்றக் கழகம் என்றும் நடந்துகொண்டதில்லை. சட்டசபையிலும் தனது பண்பும் மரபும் கெடாமல் கழகம் தனது கடமையைப் புரிந்துவரும் என்பதை, சட்டசபை முதல் கூட்டத்தில் தான் ஆற்றியுள்ள பணிமூலம், துளியும் ஐயத்திற்கிடமின்றி நிலைநாட்டிவிட்டது.

பற்பல விதமான கண்ணோட்டத்துடன், நமது கழகத்தின் சட்டசபை நுழைவையும் பணிகளையும், அரசியல் கட்சிகள் அனைத்தும் அதிவிழிப்புடன் கவனித்து வருவதை நாம் அறிவோம். கடுகத்தனை தவறு கிடைத்தாலும் அதை மலைபத்தனையாகப் பெருக்கிக் காட்டி நமது கழகத்தின்பால் பொதுமக்கள் வைத்துள்ள பற்றைத் தொலைத்துவிட வேண்டும் என்ற அற்ப ஆசையில், அவ்வரசியல் கட்சிகள் நமது கழகப் பணியினை விழிப்புடன் வேவு பார்த்து வருகின்றன என்பதையும் நாம் அறிந்தே இருக்கின்றோம்.

சட்டசபைப் பணி நமது கழகத்திற்கு மிகமிகப் புதிது. இருந்தாலும், அப்பணியிலும் மற்ற அனைவரையும்விட நமது கழகம் தனிச்சிறப்புடன் விளங்கும் என்பதை, நமது கழக சட்டசபைக் கட்சி முதல் கூட்டத்திலேயே பெருநம்பிக்கை யூட்டி இருக்கின்றது.

சட்டசபைப் பணி மூலமாக மட்டுமே தாயக அடிமை வாழ்வை முறித்துவிட முடியும் என நமது கழகம் என்றும் எண்ணியது கிடையாது. சட்டசபை மூலம் நமது இலட்சிய வெற்றிக்குக் கிடைக்கக் கூடிய துணைபலம் ஏதாவது இருக்குமானாலும், அதையும் அங்கிருந்து பெறவேண்டும் என்ற கருத்தில்தான் நமது கழகம் சட்டசபைக்குள் நுழைந்திருக்கின்றது.

தமிழக சட்டசபை வரலாற்றில், நமது கழகத் தோற்றம் தனிப் பெரும் திருப்புமுனையாகும். இப் பேருண்மையை, இனி எந்த வரலாற்று ஆசிரியராலும் இருட்டடித்துவிட முடியாது.

நமது கழக சட்டசபைக் கட்சி முதல் கூட்டத்தில் ஆற்றிய பணியை, நாம் மீண்டும் ஒருமுறை விரிவாகக் குறிப்பிடத் தேவை இல்லை. அப்பணியினை, ஒவ்வொரு ஏடும் கூடுமானவரை முழு அளவில் தெளிவாக வெளியிட்டுள்ளன. அதனை கற்றறிந்தவர் அனைவரும், கற்றுத் தெரிந்துள்ளனர்.

இனி நடைபெறப்போகும் கழகக் கூட்டங்கள் அனைத்திலும், நமது கழக சட்டசபைக் கட்சி ஆற்றியுள்ள பணியின் விரிவு கூறப்படத்தான் போகிறது. சட்டசபையில் தாம் புரிந்த சேவையை, நமது கழக சட்டசபைக் கட்சி உறுப்பினர்களும், நாட்டு மக்களுக்கு உணர்த்தாமல் இருக்கப்போவதில்லை.

நமது கழகத்தின் சட்டசபை நுழைவைக் குறித்து, பொதுமக்களிடம் பலவிதத் தவறான கருத்துக்களை, பொதுத் தேர்தல் நேரத்தில் சில நல்லவர்கள் தூவி உள்ளனர். அவ்வாறு கூறப்பட்ட ஒவ்வொன்றும் சொந்தப் பொறாமையின் விளைவு என்பதை, நமது கழக சட்டசபை பணி பொதுமக்களுக்கு அடித்துக்காட்டும் என்பதில் ஐயமில்லை.

சட்டசபை முதல் கூட்டத்தில், நமது கழக சட்டசபைக் கட்சி செம்மையாக ஆற்றியுள்ள பணியை, கழகத்திற்குக் கிடைத்த முதல் வெற்றியாகத் தான் கொள்ள வேண்டும். பொதுமக்களும் அவ்வாறுதான் கொள்ளுவர். ஆனால், நம்மை ஏசாத நாட்களை எல்லாம் தங்கள் பிறவா நாளாகக் கொண்டிருக்கின்ற குத்தும் குணமுடையோர்கள், நமது கழகத்திற்குக் கிடைத்துள்ள முதல் வெற்றி கண்டு துக்கிப்பர்—நம் மீது [illegible] வர். இழுக்கக்கூடாத எதையோ இழந்துவிட்டவர்கள் போன்று, இயல்புபடி இழிவாக ஏசவும் முன்வருவர். அவர்கள் இதற்கு முன் ஏசின எதனாலும் நமது கழகத்திற்குக் களங்கம் ஏற்பட்டது கிடையாது; எனவே, இனித் தொடுக்க இருக்கும் தூற்றல் அம்புகளாலும், நமது கழகம் சட்டசபையில் பெற்றுள்ள முதல் வெற்றியின் மதிப்புக் குறைந்துவிடப் போவது கிடையாது.

அகதிகள் முகாமில் கண்ணீர்ப் புகை

காலித்தனத்தை ஒடுக்க போலீஸ் நடவடிக்கை

கல்கத்தா, மே 9—

பான்ஹுக்லி பகுதியில் உள்ள அகதிகளைக் கட்டுப்படுத்தி, அமைதியை நிலைநாட்டப் போலீஸ் கண்ணீர்ப்புகை உபயோகித்துள்ளது.

அகதிகளுக்குப் புதுவாழ்வு அளிக்க நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியிடம் எழு குடும்பங்களுக்கு உடனடியாக பண உதவி அளிக்க வேண்டுமென்று அகதிகள் வற்புறுத்தினராம். இக்கோரிக்கையை ஏற்க மறுத்த அந்த அதிகாரி வெளியே செல்லமுடியாதவாறு அவர்கள் தடுத்துவிட்டனராம்! போலீசார் படையுடன் வந்து அகதிகளை வேண்டியும் அமைதி ஏற்படவில்லையாம்!

இதற்கிடையில் அகதிகள், கற்களை வீசி ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். போலீசார் முதலில் இலேசான பிரம்படி கொடுத்தும் கலகம் ஓயாது போகவே, இறுதியில் ஆறு இரவுண்டுகள் கண்ணீர்ப்புகை உபயோகித்துப் போலீசார் அமைதியை நிலைநாட்டினராம்.

'சட்டமும்-ஒழுங்கும் நிலை நிறுத்தப்படும்'

கைதிகள் விடுதலை பற்றி சட்ட அமைச்சர்

திருவனந்தபுரம், மே 9—

கேரள மாநிலத்தில் கம்யூனிஸ்டு அமைச்சரவை பதவிக்கு வந்ததும் 34 அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனராம்! மேலும், 1,360 கைதிகளின் சிறைத்தண்டனைக் காலம் குறைக்கப்பட்டுள்ளதாம்.

'இதனால் மாநிலத்தின் ஒழுங்கும், பாதுகாப்பும் குறைந்துள்ளது' என்று பி. சோ. உறுப்பினர் ஒருவர் சட்டசபையில் குற்றம் சாட்டிப் பேசியுள்ளார்.

அதற்குப் பதிலளிக்கையில், சட்ட அமைச்சர், 'கைதிகளை விடுதலை செய்ய அரசாங்கத்திற்கு உரிமையுண்டு' என்றும், 'ஒழுங்கும், சட்டமும் நிச்சயம் நிலைநாட்டப்படும்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

டால்மியா வழக்கு

புதுடில்லி, மே 9—

பாரத் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்குச் சொந்தமான ரூ. 2,85,00,000 மோசடி செய்ததாக டால்மியா மீதும், மற்ற எட்டு பேர் மீதும் தொடரப்பட்டுள்ள வழக்கை செஷன்ஸ் விசாரணைக்கு அனுப்பவேண்டும் என்று டில்லி அடிஷனல் மாஜிஸ்திரேட் டி. டி. சர்சா கூறியுள்ளார்.

செஷன்ஸ் விசாரணைக்கு அனுப்பலாகாது என்று எதிரிகள் தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

என்ன காரணத்திற்கோ?

புதுடில்லி, மே 9—

நாட்டின் இளைஞர்களுடன் காங்கிரஸ் இணைப்பைப் பலப்படுத்த டில்லி அக்கறை கொண்டுள்ளதாம். இதற்காக ஒவ்வொரு பகுதியிலும் முழுநேர ஊழியரை நியமிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

முக்கியமாக மாணவர்களிடையேயும்—ஆசிரியர்களிடையேயும் நெருங்கிய தொடர்பு கொண்டு காங்கிரசை பலப்படுத்துவதே இதன் நோக்கமாம்!

கிராம ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு

இங்கல்ல—மைசூரில்!

பெங்களூர், மே. 6—

மைசூர் மாநிலத்தில் கிராம ஊழியர்களின் சம்பளத்தை 50 சதவிகிதம் உயர்த்த மைசூர் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

ஆந்திரம்

ஆந்திர மாநிலத்தில் கிராம ஊழியர்களின் முறையையும், ஊதியத்தையும் மாற்றியமைக்க ஒரு புதிய திட்டம் பற்றி ஆந்திர அரசாங்கம் யோசித்து வருவதாகத் தெரிகிறது.

கேரளம்

கேரள மாநிலத்தில் ஏப்ரல் 1-ந் தேதி முதல் கிராம ஊழியர்களின் ஊதியம் ரூ. 15 முதல் ரூ. 20 வரை உயர்த்தப்பட்டுள்ளது தெரிந்த ஒன்றாகும். இதுவரையில் முன்சீப் வேலை பார்த்தவர்களுக்கு மாதம் ரூ. 32 தரப்பட்டுவந்தது; இப்போது அவர்கள் மாதம் ரூ. 52 ஊதியம் பெற்றுவருகின்றனர்.

பஞ்சாப் மாநிலத்தில் ஊதிய உயர்வு

ரூ. 1½ கோடி அதிகச் செலவு

சந்திகார், மே 9—

பஞ்சாபில் குறைந்த சம்பளம் பெறுவோரின் ஊதியத்தை உயர்த்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஊதிய உயர்வால் இறுதியில் ரூ. 1½ கோடி அதிகச் செலவாகுமென்றும், உடனடியாக ரூ. 35 இலட்சம் செலவாகுமென்றும் 1957—58-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்டுள்ளது.

உத்திரப் பிரதேச வேலைக்குத் திட்டம்

சிமெண்டுத் தொழிற்சாலைகள் ஏற்படுத்த முடிவு?

இலட்சுமணபுரி, மே 9—

உத்திரப் பிரதேச மாநிலத்தில் 'உர்க்' என்னும் இடத்திலுள்ள அரசாங்கத்தின் சிமெண்டுத் தொழிற்சாலையின் உற்பத்தியை இரண்டு பங்காக உயர்த்த இரண்டாவது திட்டத்தின்கீழ் ரூ. 2½ கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

அதோடு, மேலும் இரண்டு புதிய சிமெண்டு தொழிற்சாலைகள் ஏற்படுத்தவும் அரசாங்கம் ஆராய்ந்து வருகிறதாம்.

இந்தத் தகவலை சட்டசபையில் கைத்தொழில் உதவி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இப்போது 'சர்க்'கில் 600 முதல் 700 டன் வரை சிமெண்டு உற்பத்தி செய்யப்படுகிறதாம்.

'டி. சி.' மோசடி தடுப்பு

ஒரு பள்ளி மாற்ற நற்சான்றிதழில் (டி. சி.) சட்டவிரோதமாகவோ, அல்லது மாறுதல்கள், அழித்தல்கள் மூலமோ மோசடி இருப்பதானால், கல்வி இலாகா டைரக்டருக்கு அந்த நற்சான்றிதழை ரத்து செய்யவோ, தராமல் இருக்கவோ, அல்லது தடைசெய்யவோ அதிகாரமளிக்கும் ஒரு புதுவிதி கல்வித் துறையில் சேர்க்கப்பட்டுள்ளது.

'மத்திய அமைச்சர்கள் பதவியிலிருந்து விலக வேண்டும்'

பீகார் பஞ்சத்தின் எதிரொலி—சோஷலிஸ்டுகள் வற்புறுத்தல்

ஐதராபாத், மே 9—

எந்த நெருக்கடியும் சமாளிக்கப் போதிய உணவுப் பொருள் மத்திய அரசாங்கத்திடம் சேமிப்பில் இருக்கிறது என்று மத்திய உணவு அமைச்சர்கள் கூறியிருந்தும் பீகாரில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளதற்கு அவர்களே பொறுப்பாளிகளாகும்; எனவே, மத்திய அரசாங்கத்தில் பதவி வகிப்பவர்களும் பீகாரில் ஆட்சி புரிபவர்களும் பதவியிலிருந்து விலகிக்கொள்ளவேண்டும் என்று சோஷலிஸ்டுக் கட்சியினர் வற்புறுத்துகின்றனர்.

சென்னையிலும் சட்ட மறுப்பு?

ஐதராபாத், மே 9—

இலாபமில்லாத விவசாயத்திற்கு வரியை ரத்து செய்வது, நிலங்களிலிருந்து விவசாயிகள் வெளியேற்றப்படுவதை தடுப்பது, உயர்ந்தபட்ச நிலவுடைமையை நிர்ணயிப்பது போன்றவைகளை முக்கிய கோரிக்கையாகக் கொண்டு சோஷலிஸ்டுக் கட்சி சட்டமறுப்பு இயக்கம் துவங்கியுள்ளது.

சென்னை மாநில சோஷலிஸ்டுக் கட்சி சில நிபந்தனைகளைப் பூர்த்திசெய்தால், ஆகஸ்டு முதல் சென்னையிலும் சட்டமறுப்பு இயக்கம் ஆரம்பிக்கப்படுமாம்.

50,000 பேர் வீடின்றி தவிப்பு!

ரூ. 5 கோடி மதிப்புள்ள சொத்துக்கள் சேதமாயின

தீ விபத்தின் எதிரொலி

இரங்கூன், மே 8—

ஒரு சிறு குடிசையில் பிடித்த தீ ஒரு நகரத்தையே சாம்பலாக்கியுள்ளது.

வீடுகள், அரிசி மில்கள், எண்ணெய், ஆலைகள். பருத்தி நெசவு ஆலைகள், பள்ளிகள், சினிமாக் கொட்டகைகள், மடங்கள் உட்பட சுமார் ரூ. 5 கோடி மதிப்புள்ள சொத்துக்குச் சேதமேற்பட்டுள்ளது.

சுமார் 50,000 பேர் வீடின்றித் தவிக்கின்றனர்.

அழிந்த நகரத்தின் பெயர் மான்யா என்பதாகும்—மாண்டலேவிற்கு 80 மைல் தூரத்தில் உள்ளது.

சாதுக்களின் மனமாற்றம்

முடிகளை நீக்குகின்றனர் — காவி உடைகளை அகற்றுகின்றனர்!

ஆமதாபாத், மே 9—

குழந்தைகளை சாதுக்கள் தூக்கிச் செல்லுகின்றனர் என்ற பீதியால் மக்கள் பல இடங்களில் சாதுக்களை அடித்துத் துன்புறுத்தியுள்ளனராம்.

இதனால் நூற்றுக்கணக்கான சாதுக்கள் தங்கள் முடிகளை நீக்கியும், காவி உடைகளை அகற்றியும் விட்டனர் என்று செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

ரூ. 2 கோடி செலவில் மூக்குக் கண்ணாடி தொழிற்சாலை

கல்கத்தாவில் நிறுவ டில்லி முடிவு

புதுடில்லி, மே 8—

ரூ. 2 கோடி செலவில் ரஷ்யாவின் உதவியுடன், கல்கத்தாவில் ஒரு மூக்குக் கண்ணாடித் தொழிற்சாலை நிறுவுவது என்று டில்லி சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்களாம்!

ரஷ்ய சர்க்கார் உதவுவதாகக் கூறியுள்ள ரூ. 60 கோடி கடன் தொகையிலிருந்து ஒரு பகுதியை இந்தத் தொழிற்சாலைக்கு மூலதனமாகப் பயன்படுத்திக்கொள்ள டில்லி உத்தேசித்திருக்கிறதாம்!

சேலத்தில் இரும்பு தூங்கிக்கொண்டே தான் இருக்கவேண்டுமா?

தொழில் வளம் கிடைத்தாலன்றி பஞ்சம் எப்படி ஒழியும்?

சட்டசபையில் பேராசிரியர் க. அன்பழகன்

சென்னை சட்ட மன்றத்தில், கவர்னர் உரைமீது தோழர் க. அன்பழகன் அவர்கள் ஆற்றிய உரையின் முற்பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது; பிற்பகுதி இங்கு தரப்பட்டிருக்கிறது :—

"இன்று தமிழ் மக்கள், தொழில் துறையில் எவ்வளவோ பின்தங்கிக் கிடக்கிறார்கள். கனரகத் தொழில்களைத் தமிழ் நாட்டில் ஆரம்பிப்பதற்கு நம்மிடத்தில் வசதியில்லை-நம்மிடத்தில் அதற்குரிய மூலப் பொருள்களில்லை—அதற்கு வேண்டிய வசதிகள் இல்லை என்றெல்லாம் சில ஆண்டுகட்கு முன்வரை சொல்லப்பட்டு வந்தது. நல்லவேளையாகச் சில மேல்நாட்டு அறிஞர்கள் வந்தார்கள்—அவர்கள் வந்து ஆராய்ச்சி செய்ததின் பயனாக, 'சேலத்திலே இரும்பு கிடைக்கும்—நெய்வேலியிலே நிலக்கரி கிடைக்கும் — இன்னும் பல இடங்களில் பல மூலப் பொருள்களும் கிடைக்கும் என்று தெரிவித்தார்கள்; ஆனால் இன்று, தென்னாற்காடு பகுதியில் கிடைக்கும் நிலக்கரியைப் பயன்படுத்தி கனரகத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு எந்த ஒரு திட்டமும், இந்த அரசாங்கத்திலோ இந்த அரசாங்கத்தையும் ஆளுகின்ற மத்திய அரசாங்கத்திலோ இல்லை.

"இன்று எடுக்கப்படும் நடவடிக்கைகளால், வருகிற 1960-ஆம் ஆண்டிலிருந்து நெய்வேலியிலிருந்து 16 இலட்சம் டன் நிலக்கரி ஆண்டுதோறும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அதைக்கொண்டு ஏதோ ஒருவிதமான செங்கல் உற்பத்தி செய்யலாம்; கோல்தார், டீசல், உற்பத்தி செய்யலாம்; மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என்றும், அந்த மின்சார சக்தியை கன்னடத்திற்கும் ஆந்திரத்திற்கும் வழங்கலாம் என்றும் சொல்லுகிறார்கள்.

தம்மை மறந்துவிடும் தமிழர்கள் நிலை

"தமிழர்கள் எப்போதும் பிறருக்கு உதவி செய்வதில் தம்மை மறந்துவிடுவார்கள் என்பதை கூறவேண்டியதில்லை. கேரளத்திற்கும் ஆந்திரத்திற்கும் மைசூருக்கும் மின்சார உதவி அப்பொழுதும் தேவைப்படுமா என்பதே இப்போதுள்ள கேள்வி; ஏனென்றால், ஆந்திர சர்க்காரும் மைசூர் சர்க்காரும் பல மின்சாரத் திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். கேரள சர்க்காரும் நீர்வீழ்ச்சிகளைக் கொண்டு பல மின்சாரத் திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள்.

நம்முடைய உதவி தேவைப்படுமா?

"ஆகையினால், அவர்களுக்கு நம்முடைய மின்சார உதவி தேவையிருக்குமா என்பதே சந்தேகம். அது மாத்திரமல்ல-நெய்வேலியில் 'லிக்னைட்' அளவுக்குமேல் கிடைக்கும் என்று தெரிந்தும்கூட, அங்கு ஒரு கனரகத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு எந்தத் திட்டமும் இல்லை.

"நெய்வேலியில் கிடைக்கும் நிலக்கரியிலிருந்து 'கோல்டார்' டீசல், பெட்ரோல் கிடைக்கும்—ஒருவகை செங்கல் ஆகிய துணைப் பொருள்கள் தயாரிக்கப்படும் என்று அங்குள்ள தலைமை அதிகாரி ஓர் அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார். ஆனால் நமக்கு அங்கு செய்யப்படவேண்டியது அங்கு கிடைக்கிற நிலக்கரியைக் கொண்டு ஒரு கனரகத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படவேண்டும்.

அதனால்தான் தென்னாற்காட்டில் கிடைக்கும் 'லிக்னைட்' என்ற பழுப்பு நிலக்கரியை பக்கத்தில் 70 மைல் தூரத்தில் உள்ள சேலத்திற்கு கொண்டுபோய் அங்கு ஏராளமாகக் கிடைக்கும் 'பிக் ஐயர்ன்' (Pig Iron) இரும்பைக் கொண்டு ஒரு உருக்குத் தொழிற்சாலை ஆரம்பிக்கலாம். அதை ஆரம்பிப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பஞ்சம்—பட்டினி ஒழிய!

"இன்றைக்கு வடநாட்டில் இருக்கிற பிலாய் முதலான பெரும் பெரும் தொழிற்சாலைகள் தென்னகத்திலும் ஏற்படவேண்டும். அப்படி ஏற்பட்டால்தான் இன்று ஏற்பட்டிருக்கின்ற பஞ்சம், பட்டினி, வேலையில்லாக் கொடுமை ஆகிய நிலைமைகளை மாற்றமுடியும். இதைப்பற்றி கவர்னர் அவர்களுடைய உரையில் ஒன்றும் குறிப்பிடாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்க காரியமாகும். தென்னாட்டில் ஒரு கனரக இரும்பு தொழிற்சாலை ஏற்படுத்துவது பற்றிக்கூட கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிடாத நிலையில் நாம் அதைப் பெருமையாகக் கருத முடியாது.

ஏற்க இயலவில்லை!

"இவ்விதமாகப் பல தொல்லைகளினால் தேய்ந்துகொண்டு இருக்கிற தென்னகம், வளர்ந்துகொண்டிருக்கிற வடநாட்டை போன்று முன்னேறுகிறவரையிலும், அல்லது முன்னேறுவதற்கு வழிகள்—செயல்முறைகள் இவைகளைப் பற்றிக் குறிப்பிடுகிற வரையிலும் நாம் கவர்னர் அவர்களது உரையைத் திருப்தியாக ஏற்றுக்கொள்ள முடியாது.

துயர் துடைக்கப்படுமா?

"இவைகளன்றி, கிராம அதிகாரிகளின் வேண்டுகோள் ஏற்கப்படவில்லை—துன்பம் நீக்கப்படவில்லை. அவர்களுடைய துயர் நீக்கப்படுவதற்குரிய வழிகள் ஒன்றும் இதில் குறிக்கப்படவில்லை.

"அதுபோலவேதான், ஆரம்ப ஆசிரியர்களுடைய குறைகள் கவனிக்கப்படவில்லை; என். ஜி. ஓ.-க்களுடைய நியாயமான-குறைவான குறைகள் கவனிக்கப்படவில்லை.

"இவைகளையெல்லாம் கவர்னர் அவர்கள் தம்முடைய உரையில் குறிப்பிடாமல் விட்டிருப்பது மிகவும் வருத்தம் தருவதாகும் என்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்."

தமிழ் நாட்டில் 28 சுகாதார விடுதிகள்

சென்னை, மே 9—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 28 ஆரம்ப நிலை சுகாதார விடுதிகள் சென்னை மாநிலத்தில் ஏற்படுத்தப்படுமாம்.

ஒவ்வொரு விடுதியும் ஒரு உதவி-சர்ஜன் அதிகாரத்தின் கீழ் இயங்குமென்றும், அவருடன் பிறப்பு கவனிப்போர் இருவரும், ஒரு சுகாதார பரிசோதகர், மருந்து கலந்து தருபவர் ஒருவர், கட்டுகட்டுபவர் ஒருவர் என்ற அளவில் பணியாற்றுவராம்.

இந்த 28 விடுதிகள் ஏற்படுத்த ரூ. 26,100 செலவிடப்படுமாம்.

ஆண்டுதோறும் இவைகளின் நிர்வாகத்திற்காக ரூ. 11,540 செலவிடப்படுமாம்.

அளவுக்கு அதிகமாக மது விநியோகத் திட்டம்

சென்னை, மே 9—

சொந்த உபயோகத்திற்காக 'மதுபான பர்மிட்' பெறுபவர்கள் சம்பந்தமான விதிகள் திருத்தப்பட்டுள்ளதாம்.

இப்போது அனுமதிக்கப்பட்டுள்ள அளவை விட அதிகம் வேண்டுமானால், புதிதாக டாக்டர்களிடம் சான்று அறிக்கை பெற்று மனுச் செய்துகொள்ள வேண்டுமாம்.

1942 ஆகஸ்டு வழக்கு

இன்னும் விசாரணையில் உள்ளதாம்

தேவகோட்டை, மே 9—

1942-ல் நடைபெற்ற ஆகஸ்டுப் போராட்டத்தில், திருவாடானையில், ஒரு கள்ளுக் கடைக்கு தீ மூட்டிய காங்கிரஸ் தியாகி பெருமாள்மீது தொடரப்பட்ட வழக்கு இன்னும் விசாரணையில் உள்ளதாம். அடுத்து, 13—5—57 அன்று விசாரணை நடைபெறுமாம்.

இந்த வழக்கை வாபஸ் பெற வேண்டும் என்று திருவாடானை காங்கிரஸ் கமிட்டி செயலாளர் நடவடிக்கை எடுத்துக்கொண்டுள்ளாராம்.

அறநிலைய நிர்வாகிகள்

மாதம் ரூ. 350 வரை ஊதியமாம்

சென்னை, மே 9—

சென்னை, இந்து அறநிலையச சட்ட விதிகளை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

ஆலயங்களின் வருமானத்தைப் பொறுத்து 5 பிரிவுகள் ஏற்பட்டுள்ளன.

ஆரம்ப ஊதியம் ரூ. 25-லிருந்து ரூ. 150 வரையிலும், உயர்ந்த பட்ச ஊதியம் ரூ. 45-லிருந்து ரூ. 350 வரையிலும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கோவைக்குக் கேரளத்தின் தண்ணீர்?

கோவை, மே 8—

கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கிப் பாயும் நதிகளை கிழக்கே திருப்பிப் பயன்படுத்த விரிவானதோர் பெரிய திட்டமும், திருத்தப்பட்ட மற்றொரு திட்டமும் ஆராயப்பட்டு வருவதாக சென்னை கவர்னர், கோவை வணிகர் சங்கத்தில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

ரூ. 89,500 செலவில் சேரி முன்னேற்றம்

சென்னை, மே 8—

1955-56ம் ஆண்டில், சென்னை நகரில் சேரி முன்னேற்றத்திற்காக ரூ. 89,500 செலவிட சென்னை நகரசபைக்கு அரசாங்கம் அனுமதியளித்திருக்கிறதாம்.

இத்துடன், இந்தத் திட்டத்திற்கு சென்னை நகரசபை ரூ. 3,46,968 செலவழித்துள்ளதாம்.

வருமானத்திற்கு புதுவழி

சென்னை, மே 9—

ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின் கீழ், அரசாங்கத்தின் நீர்ப்பாசன திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ள நிலங்களுக்குத் தீர்வை விதிப்பதற்கான வழிகளைக் கண்டுபிடித்துள்ளனர்.

நிலங்களை நஞ்சை-புஞ்சை என தரம் பிரிப்பதற்கானவிதிகள் இந்த வார அரசாங்க அறிக்கையில் வெளியிடப்படுகிறதாம்.

மலர்கள் இல்லாத தோட்டம்போல் காங்கிரஸ் இன்று இருக்கிறது!

வாழ்ந்தவர்கள் வெளியேறி வெவ்வேறு பாதையில் சென்றபின் ஏற்பட்ட அலங்கோலம்

தூத்துக்குடி மே தின விழாவில் தோழர் டி. கே. சீனிவாசன் முழக்கம்

1—5—57 மாலை சுமார் 5 மணி அளவில், தி. மு. கழகச் சார்பில், மேதினவிழாவையொட்டிதோழர் கே. தாளமுத்து தலைமையில் ஓர் மாபெரும் ஊர்வலம் ஆரம்பமாயிற்று. தி. மு. கழக உட்கிளைகளும், ஸ்பின்னிங் மில் தொழிலாளர் சங்கம், ஹார்வி மில் தொழிலாளர்கள், உப்புத் தொழிலாளர்சங்கம், கைவண்டித் தொழிலாளர் சங்கம், மாட்டு வண்டித் தொழிலாளர் சங்கம், தும்பு, ஈக்கித் தொழிலாளர் சங்கம், விறகு உடைப்போர் சங்கம் ஆகியவை கலந்துகொண்டன.

மாட்டு வண்டிகள் மட்டும் 217 வரிசையாக அணிவகுத்துச் சென்றது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

தோழர் டி. கே. சீனிவாசன், நகர கழகச் செயலாளர் ஜோசப் இருவரும் சிறிது நேரம் ஊர்வலத்தில் கலந்துகொண்டு, பின்னர் மறைந்த மாவீரன் கே. வி. கே. சாமியின் இல்லத்தின் பக்கம் துவக்க இருக்கும் சாமி ஞாபகார்த்த வாசகசாலையில் தோழர் டி. கே. சீனிவாசன் கழகக் கொடியை ஏற்றுவித்தார்.

பின்னர் அவர் ஆரோக்கியபுரம் சென்று, சாமியின் சமாதிக்கு மலர் மாலை அணிவித்துத் தனது இறுதி மரியாதையைச் செலுத்தினர்.

பின்னர் சாமியின் நிர்வாகத்திற்குட்பட்ட வி. வி. டி. நினைவுப் பள்ளியைப் பார்வையிட்டார்.

இரவு 8 மணிக்கு நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஜோசப் தலைமையில் பொதுக் கூட்டம் ஆரம்பமாயிற்று.

அவர் தனது தலைமையுரையில் 1886-ம் ஆண்டில் அமெரிக்காவில் உள்ள சிகாகோ நகரில் ஏற்பட்ட புரட்சியையும், அதைத் தொடர்ந்து அமெரிக்க அரசாங்கம் கையாண்ட அடக்குமுறையையும் அதற்காக பலியான தொழிலாள வர்க்கம் அன்று முதல் 8 மணி நேர வேலை என்பதை அமுலுக்குக் கொண்டுவந்த நாள்தான் மே நாள் எஸ்பதையும் விளக்கிப் பேசினர்.

சில தீர்மானங்களை வழி மொழிந்து தோழர் தாளமுத்து விளக்கிப் பேசினர்.

பின்னர், நகர தி. மு. கழகம், மஜீத் மன்றம் ஆகியவைகளின் சார்பில் கைத்தறித் துண்டும், ஏராளமான கிளைக் கழகங்கள், தொழிற்சங்கங்கள் சார்பில் மலர் மாலைகளும் தோழர் டி. கே. சீனிவாசனுக்கு அணிவிக்கப்பட்டது.

தோழர் டி. கே. சீனிவாசன அவர்கள் பேசியதாவது :—

"மனைவியுடன் வாழ்க்கை நடத்தும் ஒருவன் 'ரசத்திலே உப்பு இல்லை—குழம்பிலே காரம் காணாது' என்றால், அவன் அவளைக் கண்டிக்கமுடியும்; அவளும் கட்டுப்படுவாள். பந்தியிலே சென்று சாப்பிடும்போது அவ்வாறு சொல்லமுடியுமா? முடியாது. இன்னும் சற்று அதிகமாகப்போனால் சத்திரத்தில் சாப்பிடுகிறவன், குறை சொல்லி சண்டை போட முடியாது. அப்படிச் சண்டை போட்டால், 'பிரியமானால் சாப்பிடு; இல்லையானால் போ' என்ற பதில்தான் கிடைக்கும்.

"தி. மு, கழகம் மனைவியை மணந்து வாழ்க்கை நடத்தும் கட்சி! காங்கிரஸ் கட்சி பந்தியிலே சாப்பிடுகிற கட்சி! கம்யூனிஸ்டுக் கட்சியோ சத்திரத்திலே சாப்பிடுகிற கட்சி!

"இன்று கம்யூனிஸ்டுகளாகவும் ஏனைய கட்சிகளாகவும் இருப்பவர்கள் யார்? காங்கிரசிலிருந்து வந்தவர்கள்தானே! அழகான தோட்டம் என்று எண்ணிக் கொண்டு செல்கிறோம்; ஒருவன் வருகிறான் — 'அங்கே முல்லை இல்லை' என்கிறான்! அடுத்தவன் —'மல்லிகை இல்லை' என்கிறான்; மூன்றாமவன் 'இருவாட்சி இல்லை' என்கிறான்; கடைசியில் வருகிறவன்—'மலர்களே இல்லை' என்கிறான். அப்படியானால் அது எப்படித் தோட்டமாக இருக்கமுடியும்?

"அதேபோல்தான் கம்யூனிஸ்டுகள் வெளியேறினர்—காங்கிரசில் கம்யூனிசம் இல்லை! சோஷலிஸ்டுகள் வெளியேறினர்—காங்கிரசில் சோஷலிசம் இல்லை! பிரஜா சோஷலிஸ்டுகள் வெளியேறினர் — அங்கே நேர்மை இல்லை! கடைசியில் இப்போது காங்கிரஸ் சீர்திருத்தக் குழு வெளியேறியது — காங்கிரசிலே தியாக புத்தி இல்லை! அப்படியானால் காங்கிரசில் என்னதான் இருக்கிறது!

"எனவே, ஏனைய கட்சிகள் எதுவும் நமக்காக இருக்கும் கட்சிகள் அல்ல; தி. மு. கழகம் ஒன்றுதான் உங்கள் கட்சி—உங்களைப் பற்றி சிந்திக்கும் கட்சி! 'தேசியம் வேண்டாம்' என்கிற கட்சி அல்ல—'சர்வ தேசியம்' வேண்டாம் என்கிற கட்சி!

"'வாழ்க என் நன்னாடு—பொன்னாடு' என்றான் லெனின்; ரஷ்யா தலைநிமிர்ந்து வாழத் தொடங்கியது!

"'வாழ்க என் நன்னாடு—பொன்னாடு' என்றான் கமால்; துருக்கி வாழ்ந்தது!

"'வாழ்க என் நன்னாடு—பொன்னாடு' என்றான் மா-சே-துங்; சீனா வாழத் தொடங்கியது!

"'வாழ்க என் நன்னாடு—பொன்னாடு' என்கிறார் அண்ணா; திராவிடம் வாழும்—வாழும் நிலை பெறும்!

"நமது நாட்டைப்பற்றி கவலையுறாது சர்வ தேசியம் பேசிக்கொண்டே இருப்பது பலன் தராது; எனவே, இந்த மேநாளில்—தொழிலாளியின் தினத்தில் நம் நாடு குறித்து நாம் கவலைப்படுவோம்."

'தொழிற்சங்கமாகப் பதிவு செய்யவேண்டும்'

என். ஜி. ஓ. சங்க விருப்பம்

மதுரை, மே 6—

சென்ற சனவரியில் நடைபெற்ற என். ஜி. ஓ.-வினர் மாநாட்டில், சங்கத்தைத் தொழிற்சங்கமாகப் பதிவு செய்ய வேண்டும் என்று கோரி, ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையை வற்புறுத்தி மதுரை என். ஜி. ஓ. சங்கம் மற்றொரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

திருமணம்

5—5—57 காலை 9-30 மணியளவில், தோழர் சு. பாலன் தலைமையில், தோழர் கிருட்டிணன்—தோழியர் இல்லாமல்லி திருமணம் செம்பியம் எண் 7/3 கோபாலபுரத்தில் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி தோழியர் சத்தியவாணிமுத்து, தோழர்கள் பொன்னுரங்கம், ஜேசுதாஸ், கதிர் டி. சுப்பிரமணி ஆகியோர் பேசினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம்நாடு' வளர்ச்சிக்காக ரூ. 1. அன்பளிப்பாகத் தரப்பட்டது.

லாகூரில் இந்திய அதிகாரிகள் கைது

டில்லி ஆட்சேபக் குறிப்புத் தந்துள்ளது

கராச்சி, மே 9—

கடந்த செவ்வாயன்று இரவு லாகூரில் இந்திய தூதுவராலுவலகத்தைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகளைப் பாகிஸ்தான் போலீசார் கைது செய்து ஏழு மணி நேரத்திற்குமேல் சிறைப்படுத்தி வைத்திருந்ததாகத் தெரியவருகிறது.

கோவிந்த் எச். சேத், மற்றும் எம். பி. சி. இராசன் என்ற அந்த இரு அதிகாரிகளும் கடைக்குச் சென்று சாமான்கள் வாங்கிக் கொண்டிருந்தனராம்; இவர்களுடன் ஐ. ரா. இரயில்வே நிலயத்தில் பயிற்சி பெறும் மூன்று இந்திய இரயில்வே அதிகாரிகளும் இருந்தனராம்.

இவர்கள் வந்த காரை, சாலையிலிருந்து அப்பால் தள்ளி நிறுத்துமாறு ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் கேட்டாராம்; ஆனால், இந்த அதிகாரிகள் இரண்டொரு நிமிடங்களில் இடத்தை விட்டுச் சென்று விடுவதாகக் கூறினராம். இதனால் கோபமடைந்த அந்தப் போலீஸ்காரர், பல போலீஸ் அதிகாரிகளை வரவழைத்துவிட்டாராம்.

அவர்கள் இந்த அதிகாரிகளைக் கைது செய்து, போலீஸ் நிலயத்திற்கு நடத்தியே அழைத்துச் சென்று 'லாக்அப்'செய்தனராம். இவர்கள், தாங்கள் இன்னார் என்று தெரிவித்த பிறகும் அந்தக் கொடுமை செய்தனராம், பாகிஸ்தான் போலீசார்!

மேலும், இவர்கள் குடித்திருந்ததாகவும், அந்த நிலையில் பொது இடத்தில் தகராறு செய்து கொண்டதாகவும் போலீசார் வழக்குப் பதிவு செய்தனராம்.

டில்லியின் ஆட்சேபக் குறிப்பு

இந்தியத் தூதுவர் அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகளைக் காரணமின்றிக் கைது செய்து கொடுமைப்படுத்திய பாகிஸ்தானின் செயலுக்கு எதிராக, இந்திய சர்க்கார் ஆட்சேபக் குறிப்பொன்றை பாகிஸ்தான் தான் வெளிவிவகார இலாகாவில் தாக்கல் செய்துள்ளனர் என்றும் தெரிபவருகிறது.

குளித்தலை கைத்தறி வார விழாவில்

மு. கருணாநிதி

11—5—57 மாலை 6 மணிக்கு, குளித்தலை—வ. உ. சி. சதுக்கத்தில், குளித்தலை—தண்ணீர்ப் பள்ளி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் சார்பில், 4-வது ஆண்டு கைத்தறி வார விழாப் பொதுக்கூட்டம் திரு. இ. எஸ். நாகேசன் தலைமையில் நடைபெறும்; அதுபோது, தோழர் மு. கருணாநிதி அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

அன்று மாலை 4 மணியளவில் தண்ணீர்ப் பள்ளியிலிருந்து கைத்தறியாளர்களின் மாபெரும் ஊர்வலமொன்று புறப்பட்டு, வ.உ.சி. சதுக்கம் வந்தடையும்.

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் நிறுவன ஊழியர்கள்

சம்பள உயர்வுக் கோரிக்கை ஈடேறுகிறது

பம்பாய், மே 9—

இந்திய ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் ஊழியர்களில், குமாஸ்தாக்கள், மற்றும் கடைநிலை ஊழியர்கள் 21,000 பேருக்குச் சம்பளம், மற்றும் கிராக்கிப் படி உயர்வு தருவது என்று டெல்லி சர்க்கார் நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்திருக்கிறார்.

இதனால், இனி மாதந்தோறும் இந்த நிதி கார்ப்பரேஷன் ரூ. 5-இலட்சம் அதிகம் செலவிட வேண்டியிருக்குமென மதிப்பிடப் பட்டிருக்கிறது.

கடந்த ஒரு வாரமாக இந்தச் சம்பள உயர்வு நிர்ணயம் பற்றி சர்க்கார், கார்ப்பரேஷன், மற்றும் ஊழியர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கூடிப் பேசிவந்தனர்.

இறுதியாக எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு இந்தச் சம்பள உயர்வு அறிவிக்கப்பட்டிருக்கிறது!

16,000 குமாஸ்தாக்களுக்கு, இனி துவக்கச் சம்பளம் மாதம் ரூ. 75 ஆக இருக்கும் என்றும், இது ரூ. 300 வரை செல்லும் என்றும், இந்த அம்சம் ஊழியர் சங்கத்தால் வரவேற்கப்பட்டிருக்கிறது என்றும் தெரியவருகிறது.

கழகக் கூட்டங்கள்

★

மாயூரம்:
நகரப் பூங்காவில்
12—5—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: இரா. ஜோசப்
பேசுவோர்:
க. அன்பழகன்
சி. கிருஷ்ணமூர்த்தி
டி. கே. கோபாலகிருஷ்ணன்
(மாலை 5-மணிக்கு தோழர் பி. டி. இராசன் குழுவினரின் இன்னிசை நடைபெறும்)

★

தூத்துக்குடி:
சந்தண மாரியம்மன் கோயில் திடல்
12-5-57 மாலை 6-30 மணிக்கு
தலைவர்: வி. சேகரன்
பேசுவோர்:
என். சீவரத்தினம்
சு. கந்தசாமி

★

கொறுக்கை:
மாரியம்மன்கோயில் சன்னதியில்
11—5—57 மாலையில்
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர்: வி. சின்னத்தம்பி
கொடியேற்றுபவர்:
சு. பத்பநாபன்
துவக்குபவர்:
என். வி. நடராசன்
பேசுவோர்:
குடவாசல் கிருஷ்ணமூர்த்தி
அய்யப்பகான்
எம். பூபாலன்
எஸ். ஆர். இராதா
கருப்பூர் காளிதாஸ்

★

முசிரி—டி. புத்தூர்:
சிவன் கோவில் திடலில்
13—5—57 இரவு 9 மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர்: பி. எஸ். முத்துசெல்வன்
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
மு. பெ. முத்துக்கருப்பன்
சி. பசவலிங்கம்
(இரவு 9-மணிக்கு ஊர்வலம் நடைபெறும்)

★

வேலூர்:
கே. வி. கே. சாமி திடலில்
13—5—57 மாலை 6-மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர்: மு.பெ. முத்துக்கருப்பன்
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
த. குட்டியப்பன்

★

புதுக்கோட்டை:
திலகர் திடலில்
12—5—57 மாலை 6-மணிக்கு
தலைவர்: நாகராசன்
பேசுபவர்: கி. மனோகரன்

★

சேலம் - கிச்சிப்பாளையம்:
சந்நியாசி குண்டு ரோடில்
12—5—57 மாலை 5 மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர்: ந. பிச்சமுத்து
கொடியேற்றுபவர்:
ஏ. மாரியப்பன்
பேசுபவர்:
என். எஸ். இளங்கோ

திருப்பூர் நிகழ்ச்சிகளில்

என். வி. நடராசன்

12—5—57 7-15 மணிக்கு: இரயிலடி வரவேற்பிலும், 9 மணிக்கு வாலிபாலையத்தில் கொடியேற்று விழாவிலும், காலை 10 மணிக்கு பனியன் பேக்டரி தொழிலாளர் கழகக் கூட்டத்திலும், மாலை 6 மணிக்கு, வாலிபாலையம் — சுப்பிரமணியர் கோயில் பின்புறம் 13, 14-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கலந்துகொள்வார்.

கி. மனோகரன்

அறிவிப்பு

பம்பாய் - ஆமதாபாத் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக மே 17-ந் தேதி காலை 7 மணிக்கு சென்னையிலிருந்து புறப்படுகிறேன்—மே 25-ந் தேதிக்குப் பிறகுதான் திரும்பமுடியும். எனவே, அண்மையில் ஒத்துக் கொண்டு - ஆனால் உறுதி செய்யப்படாத நிகழ்ச்சிகளை ஜூன் முதல் வாரத்திலிருந்து ஆரம்பிக்கலாம் என்பதை கழகத் தோழர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அன்பன்,
கி. மனோகரன்

கோவை — சூலூர்

தி. மு. கழகத் தோழர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் வேண்டுகோள்

"13-5-57 முதல் 20-5-57 வரை சூலூர் தி. மு. கழக அலுவலகத்தில், செயலாளர் குறிப்பிடுகின்ற நேரத்தில், சூலூர் பஞ்சாயத்தில் உள்ளிட்ட பகுதித் தோழர்கள் தி. மு. கழகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

"சூலூர் தி. மு. கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் இதில் பெரும் பங்கேற்று, பெருவாரியான உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்."

என்று, கோவை மாவட்ட தி. மு. கழகத் துணைச்செயலாளர் வி. சண்முகநாதன் அறிவிக்கிறார்.

மே தின விழாவும் — பாராட்டுக் கூட்டமும்

12—5—57 மாலை 6 மணிக்கு, (வ. ஆ. மாவட்டம்) சாத்துவாச்சாரி தி. மு. கழகச் சார்பில், தோழர் கே. ஏ. மதியழகன் தலைமையில், மே தின விழாவும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்குப் பாராட்டுக் கூட்டமும் நடைபெறும்; அதுபோது, தோழர்கள் எம். பி. சாரதி, ப. உ. சண்முகம், களம்பூர் - எஸ். எம். அண்ணாமலை, சந்தானம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

மே விழாப் பொதுக்கூட்டம்

10—5—57 இரவு 7 மணிக்கு, சென்னை—இராயபுரம் சிங்காரவேலர் பகுத்தறிவு மன்றப் பணிமனையில், தோழர் அப்பாராஜு தலைமையில் மே விழாப் பொதுக் கூட்டம் நடைபெறும்; தோழர் என். சீவரத்தினம் பேசுவார்.

கண்டனக் கூட்டம்

11—5—57 மாலை 6-மணிக்கு திருவொற்றியூர் சன்னதித் தெருவில், தோழர் ஏ. வி. ஆறுமுகம் தலைமையில் திருவொற்றியூர் கே. பி. சி. தொழிற்சாலை கதவடைப்புக்குக் கண்டனக் கூட்டம் நடைபெறும்; தோழர்கள் கண்ணதாசன், வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோர் பேசுவர்.

மாலை 4-மணியளவில் திருவொற்றியூர் ஐரோடு டோல்கேட்டிலிருந்து ஓர் ஊர்வலம் புறப்பட்டு கூட்டத்தில் முடிவடையும்.

சென்னை மாநில நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்

4-வது அகில இந்தியக் கைத்தறி வார விழா

34, பாந்தியான் ரோடு, எழும்பூர், சென்னை-8.

பொதுமக்களுக்கு தினந்தோறும் மாலை 4மணிக்கு திறந்துவைக்கப்படும்

11—5—1957 மாலை 6-15 மணி: பொதுக்கூட்டம்

தலைவர்: திரு. கே. என். சீனிவாசன், மேயர்
சென்னை நகராண்மைக் கழகம்

பேசுபவர்: திரு. சி. என். அண்ணாதுரை எம்.ஏ., எம்.எல்.ஏ.

மாலை 7 மணி: இன்னிசை

திரு. ஜி. என். பாலசுப்பிரமணியம் பி.ஏ. (ஆனர்ஸ்) — பாட்டு
திரு. டி. என். கிருஷ்ணன் — வயலின்
திரு. பழனி-சுப்பிரமணியம் — மிருதங்கம்

பிரவேசக் கட்டணம் கிடையாது

பெங்களூர் - 3 இலட்சுமி நாராயணபுரம் செயற் குழு உறுப்பினர்களுக்கு:

12—5—57 மாலை 4 மணி யளவில், கழகப் பணி மனையில் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்; அதுபோது, கழக வரவு-செலவு; துணைச் செயலாளர் விலகல்; மே தின விழா கொண்டாடுவது ஆகிய பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படும்.

மாயவரம்—கூறைநாடு ஆசிரியர் வேலாயுதம் மன்ற 6-வது ஆண்டு விழா

12—5—57 காலை 10 மணியளவில், கூறைநாடு—மேலஒத்த சரகில் தோழர் து. காசிநாதன் தலைமையில், மேற்படி ஆண்டு விழா நடைபெறும்; அதுபோது, தோழர்கள் பேராசிரியர் க. அன்பழகன், குடவாசல்-சி. கிருஷ்ணமூர்த்தி, டி. கே. கோபாலகிருஷ்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

காஞ்சியில் நெடுஞ்செழியன் படிப்பகத் துவக்கவிழா

12—5—57-ல், மேற்படி படிப்பகத் துவக்க விழா, காஞ்சி—பிள்ளையார்பாளையம், கிருஷ்ணராயர் தெருவில், தோழர் இலட்சுமணன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், மாணவி சற்குணம், கே. டி. எஸ். மணி ஆகியோர் பேசுவர்.

சென்னை — பாரி நூல் நிலையத் திறப்புவிழா

12—5—57 மாலை 6-மணிக்கு மேற்படி நூல் நிலயத் திறப்பு விழா, சென்னை-1. எண் 3/16, பெருமாள் கோயில் தோட்டத் தெரு முதல் சந்தில், திரு. புலவர் தணிகை உலகநாதன் அவர்கள் தலைமையில் நடைபெறும்; அதுபோது அறிஞர்கள் பலர் சிறப்புச் சொற்பொழிவாற்றுவர்.

சென்னை-பெத்துநாய்கன்பேட்டை தியாகராயர் மன்றம் திறப்பு விழா

11—5—57 மாலை 6 மணிக்கு, மேற்படி மன்றத் திறப்பு விழா, பெத்துநாய்க்கன்பேட்டை, எண். 44, வெங்கட்ராமையர் தெருவில், தோழர் சி. ஆர். பாலசுந்தரம் தலைமையில் நடைபெறும்; பேராசிரியர் மயிலை - சிவமுத்து அவர்கள் மன்றத்தைத் திறந்துவைத்து சிறப்புரையாற்றுவார்.

காதணி விழா

12—5—57 காலை 10-மணிக்கு பொன்னேரி வட்டம்—வல்லூர் கிராமம் மேலண்டை வீதி, தோழர் இ. சாமிநாதன் அவர்களின் புதல்வி தெய்வசிகாமணிக்குக் காதணிவிழா, அவருடைய இல்லத்தில் தோழர் ஏ. சாமிநாதன் தலைமையில் நடைபெறும்; தோழியர் சத்தியவாணிமுத்து, தோழர் ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

11-5-57 மாலை 6-30 மணிக்கு, வடகோவை தி. மு. கழகப் பணிமனையில், தோழர் தங்கமாணிக்கம் தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்; "நாட்டிற்கு நமது பணி' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

ஆதம்பாக்கம் தி.மு. கழக பொது உறுப்பினர்கட்கு:

11—5—57 மாலை 7 மணிக்கு, தோழர் ஜானகிராமன் அவர்கள் இல்லத்து மாடியில் தோழர் தி. ந. சம்பந்தம் தலைமையில், மேற்படி கூட்டம் நடைபெறும். அதுபோது, புதிய நிர்வாகிகள் தேர்தல் நடைபெறும்.

முதுகுளத்தூர் தி.மு.கழக உறுப்பினர்கள் கூட்டம்

12—5—57 காலை 10 மணியளவில், கழக உறுப்பினர்கள் கூட்டம் கழகக் கட்டிடத்தில் நடைபெறும்; அதுபோது, கழக வளர்ச்சி குறித்தும், மற்றும் பல முக்கியப் பிரச்சினைகள் பற்றியும் ஆராயப்படும்.

விருதுநகர் தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம்

12—5—57 மாலை 4 மணி யளவில், அருப்புக்கோட்டை ரோடிலுள்ள கழகப் புதிய பணி மனையில், நகரக் கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; அதுபோது, கழக ஆக்கவேலை குறித்தும், மற்றும் செயலாளரால் கொண்டுவரப்படும் பொருள்கள் குறித்தும் விவாதிக்கப்படும்.

திருமணங்கள்

★

12—5—57 காலை 9-30 மணி அளவில், கோவை மாவட்டம்—மேங்கோரஞ்சி தோழர் இராசகோபாலன்—தோழியர் சந்திராம்மாள் வாழ்க்கை ஒப்பந்த விழா, தோழர் சண்முகநாதன் தலைமையில், மணமகன் இல்லத்தில் நடைபெறும்; தோழர்கள் அழகிரி, இராமநாதன், செகநாதன் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

12—5—57 காலை 11-30 மணி அளவில் தண்டரை—பட்டாபிராம் தோழர் க. துரைராஜ்—தோழியர் த. மல்லீஸ்வரி வாழ்க்கை ஒப்பந்த விழா, தோழர் க. மு. பாபு தலைமையில், எண் 19, தண்டரை-பட்டாபிராமில் நடைபெறும்; தோழியர் சத்தியவாணிமுத்து, தோழர்கள் வி. எஸ். கோவிந்தராசன், ஆர். ஜார்ஜ், க. சிதம்பரம் மற்றும் பலர் வாழ்த்துரை வழங்குவர். தோழர் டேப்-இராதாமாணிக்கம் இன்னிசையும் நடைபெறும்.

* * *

12—5—57 காலை 7-30 மணி அளவில், சென்னை—சூளை கலியாண மேஸ்திரி தோட்டத்தில் கா. அப்பாதுரையார் அவர்கள் தலைமையில் தோழர் மு. ஆதிநாராயணன்—தோழியர் சரசா வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெறும்; அதுபோது, மணமக்களை வாழ்த்தி தோழியர் சத்தியவாணிமுத்து, தோழர்கள் என். சீவரத்தினம், ஆர். ஜார்ஜ், வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.